DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 111/2012 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 5 |
| | |
| Name | மணி |
| Father / Husband Name | நாச்சியப்பன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 25th July 2022.

---

முதல் விசாரணை:-

நான் சிவகங்கை காஞ்சிரங்காலில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். அ.சா. 1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

---

Hostile (அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன் படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 06.03.2012ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது வெளியே பக்கத்தில் சத்தம் கேட்டு வந்த பார்த்த போது அ.சா.1க்கும், அ.சா.1ன் மகள் இடையமேலூரில் கல்யாணம் செய்து கொடுத்த சந்திரன் வகையறாவுக்கும் சொத்து சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும், அதை வைத்து காம்பவுண்ட் அருகே நின்ற அ.சா.1 ஐ சந்திரன் கெட்ட வார்த்தையால் பேசி கையில் இருந்த வாங்கருவாளால்

தலையின் வலது பக்கம் வெட்டி இரத்த காயம் ஏற்படுத்தியும், வலது காதை அறுத்தும், முத்துப்பாண்டி கெட்ட வார்த்தையால் பேசி, கொலைமிரட்டல் விடுத்து கம்பால் நெஞ்சு, வலது காலில் அடித்தும், அ.சா.1 ற்கு இரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும் விலக்க வந்த அ.சா.1 ன் மனைவியை சந்திரன் கையில் இருந்த வாங்கருவாளல் தலையில் வெட்டி இரத்த காயத்தை ஏற்படுத்தினார் என்றும், இலட்சுமி கம்பால் ஏலம்மாளின் தலையில் அடித்து கொலை மிரட்டல் விடுத்து கெட்டவார்த்தையால் பேசி, கீழே தள்ளி காலால் மிதித்தார் என்றும், அ.சா.1 ன் மகன் மாயக்கண்ணணையும், முத்துப்பாண்டியும், ரமேஷ் சேர்ந்து கம்பால் மாறி மாறி அடித்தார்கள் என்றும், அதை பார்த்த நானும், சேகர் என்பவரும் விலக்கி விட்டோம் என்றும் அப்போது சந்திரன், முத்துப்பாண்டி, இலட்சுமி, ரமேஷ் ஆகியோர்கள் வாங்கருவால், கம்பைக் காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இல்லை.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 25.07.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.